பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 24 | சனிக்கிழமை | 11.10.2025 | அதிர்வு 072

## எலிக்காய்ச்சல் குறித்து 12 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை!



இலங்கையில் எலிக் காய்ச்சல் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ள 12 மாவட்டங்கள் அடையா ளம் காணப் 07

### சமஷ்டியை நாம் விட்டுக்கொடுக்கவில்லை

# தமிழரசை மலினப்படுத்தி அழித்து விடலாம் என பகல் கனவு காணாதீர்!

### கஜேந்திரகுமாருக்குச் சிவஞானம் தக்க பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)

**“எங்கள் கட்சிக் கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமாருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக்கொடுக்க வில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.** 06



# பேச்சுகளின் பின்னரே அமைச்சரவையில் மாற்றம்

### துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சுகளில் இருந்து தூக்கப்பட்ட பிமல் ரத்நாயக்க ஊடகங்களிடம் இப்படிக் கூறுகின்றார்



“நான் எதிர்க்கட்சியினரிடம் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு வேலை செய்யபவன் அல்லன். பேச்சுவார்த்தைகளின் பின்னரே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.”

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுகள் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டு அநுர கருணாதிலகவிடம் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக நேற்று பதவியேற்ற பிமல் ரத்நாயக்க, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “எதிர்க்கட்சியினர் 07




இலங்கையில் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய சிறுபான்மையினர் தங்களது தனித்துவ அடையாளத்தைக் குறிப்பிட்டு, அவற்றின் அடிப்படையில் தங்கள் இன, மத, மொழி உரிமைகளுக்கான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதை முற்றாகத் தடை செய்யும் நோக்கில் முன்நகர்த்தப்பட்ட சதித் திட்ட நடவடிக்கை தற்காலிகமாக முறியடிக்கப் பட்டிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய உரிமையை ரத்து செய்வதற்கான சட்ட நகர்வுகளை தேசிய மக்கள் சக்தி அரசு இப்போது மும்முரமாக முன்னெடுத்திருக்கின்றது. ஆனால் இந்த நகர்வு ஆரம்பத்தில் தனி நபர் பிரேரணை போல எதிர்க்கட்சி தரப்பில் இருந்த ஓர் உறுப்பினரின் பெயரில் முன் நகர்த்தப்பட்டது. அதையே பின்னர் ஆளும் தரப்பு கைப்பற்றிக் கொண்டு, எதிரணியும் ஆளுந்தரப்பும் சேர்ந்து செய்கின்ற வேலையாக அந்தக் காய் நகர்த்தலை இப்போது காட்டி முன்னெடுக்கின்றது. 06






# காணி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கையை வரவேற்ற ஆளுநர்

காணி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்தமையை வரவேற்ற வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு வலியுறுத்தினார்.

அத்துடன் கடந்த காலங்களில் இடம்பெற்றதைப் போன்று மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொலிஸாருக்கும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாணத்துக்குரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள் மற்றும் ஆளுநர் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், பொலிஸாரின் நடவடிக்கைகளில் முன்னேற்றம் இருப்பதாகவும் ஆனாலும் இன்னமும் சில பொலிஸ் நிலையங்களில் மக்களின் முறைப்பாடுகளை ஏற்க மறுகின்ற சம்பவங்கள் நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டினார். மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களால் ஏற்படும் நெரிசல்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பில் ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலைகளுக்கு முன்பாக பொலிஸார் கடமையிலுள்ள போதும் வீதிகளில் நெரிசல் காணப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிக பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று பாடசாலைகளுக்கு அண்மையாக வீதிகளில் கனரக வாகனங்கள் தரித்து நிற்பதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், பிரதான வீதிகளின் கரையோரங்களில் வாகனங்கள் தரித்து நிற்பதால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார்.

பொலிஸாரின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே இவற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வேம்படிச் சந்தியிலுள்ள சமிக்ஞை விளக்குப் பகுதியில் பாடசாலை நேரங்களில் சமிக்ஞையைக் கவனியாது பெற்றோர் மாணவர்களுடன் பயணிக்கின்றனர் என்று குறிப்பிட்ட ஆளுநர், இவ்வாறான செயற்பாடுகள் ஆபத்தானவை என்பதால் பொலிஸார் பாடசாலை நேரங்களில் இத்தகைய இடங்களில் கட்டாயம் கடமைகளில் ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வீதிகளில் இரவு நேரங்களில் குப்பை போடுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் பொலிஸாரின் ஒத்துழைப்பைக் கோருகின்றமை தொடர்பாக ஆளுநர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார்.

சுற்றாடல் பொலிஸாருடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பணியாளர்களையும் ஈடுபடுத்தத் தயாராக இருப்பதாகவும், குப்பைகள் அடிக்கடி போடப்படும் பிரதேசங்களை இனங்கண்டு அந்தப் பகுதிகளில் சுற்றுக் காவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் – கோட்டைப் பகுதியில் இடம்பெறும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதேநேரம், புகைப்பிடித்தல் பொருட்கள் விற்பனையைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்த முடியாத நிலையில், சங்கேத குறியீடுகளை வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

தொடர்ச்சி▼











# காணி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கையை வரவேற்ற ஆளுநர்

தொடர்ச்சி▲

என்று சுட்டிக்காட்டிய ஆளுநர் அது தொடர்பான ஆதாரங்களையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இதன் பின்னர் ஒவ்வொரு மாவட்ட செயலர்களாலும் தத்தமது மாவட்டங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தெரிவிக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில், பெண் பொலிஸாரின் பற்றாக்குறை, சட்டவிரோத மணல் அகழ்வு, அரச காணி தொடர்பான பிணக்குகளில் பிரதேச செயலர்களுடன் இணைந்து செயற்பட பொலிஸார் தவறுகின்றமை ஆகிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு விற்பனை மிகப் பிரதான பிரச்சினையாக உள்ளதாகச் சுட்டிக்காட்டிய மாவட்ட செயலர், அங்கு கசிப்பு விற்பனையில் ஈடுபடும் குடும்பங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டியுள்ள போதிலும் நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் நிலவுதாகக் குறிப்பிட்டார். அதேபோன்று சட்டவிரோத மணல் அகழ்வு, மரம் மற்றும் கால்நடைகள் கடத்தல் என்பனவும் நடைபெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மணல் அகழ்வு, கசிப்பு உற்பத்தி என்பன இடம்பெறுவதாக மாவட்ட செயலர் தெரிவித்தார். கால்நடைகள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு மண்டைதீவு சந்தி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய இடங்களில் பொலிஸ் காவலரணங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒலிபெருக்கி பாவனைக்கான கட்டணம் பொலிஸார் அறவிடுகின்றமையால் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படும்போது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்ற பொறுப்பும் பொலிஸாருக்கு உள்ளது என்று யாழ். மாவட்ட செயலர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு பெரும் பிரச்சினையாக உள்ளதாக மாவட்ட செயலர் குறிப்பிட்டார். கல்லாறை அண்மித்து காட்டை அழித்து மணல் அகழ்வு நடைபெறுகின்றது என அவர் தெரிவித்தார். அங்கு அகழப்படும் மண்ணை விற்பனைக்காக சேகரித்து வைக்கும் இடத்துக்கு கொண்டு வரப்படும் பாதையில் பொலிஸ் காவலரண் அமைப்பதன் ஊடாக இதனைத் தடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். கௌதாரிமுனை கடற்கரைக்கு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அதிகளவு இளையோர் வருவதாகவும் அங்கு மதுபானம் அருந்திவிட்டு முரண்பாடுகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்ட மாவட்ட செயலர் பொலிஸ் காவலரண் அங்கு அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அதேநேரம், பாடசாலை மாணவர்களுக்கு பச்சைகுத்தும் நிலையங்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வில் ஒரு கிராமமே ஈடுபடுகின்றது என்றும் அங்கு சென்று கைது செய்து வருவதே பொலிஸாருக்கு சவாலாக உள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் சட்டவிரோத மணல் கடத்தலை தொழிலாக மேற்கொண்டு வருவதாகவும், அப்படிச் செய்பவர்கள் பொலிஸாருக்கு கூட பணம் கொடுத்து அதனைச் செய்கின்றமையும் தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். தனது தலைமையில் விசேட குழு அமைத்து இதற்கு எதிரான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் 3 மாதங்களுக்குள் 130 டிப்பர்களை பிடித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கசிப்பு உற்பத்தி தொடர்பான விவகாரத்தில் பொலிஸாரை விட மதுவரித் திணைக்களத்தினருக்கு கூடுதல் அதிகாரங்கள் இருப்பதாகவும் அவர்கள் இந்த விடயத்தில் போதிய ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

இதேநேரம், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை என்பது அரச நிறுவனம் என்பது பல பொலிஸாருக்குத் தெரிவதில்லை என அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார். அத்துடன் அதிகார சபை சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கின்றபோது அதனால் நடவடிக்கைக்கு உள்ளாக்கும் தரப்பு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தால் பொலிஸார் அதிகார சபையையும் விசாரணைக்கு அழைத்து அதிகார சபையை மலினப்படுத்துகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் சில பஸ்கள் மண்ணெண்ணையில் இயங்குகின்றன என்றும் அதனை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார். பொலிஸார் அவ்வாறான பஸ்கள் தொடர்பில் அறியத்தந்தால் அவர்கள் டீசலுக்கு மாறும் வரை அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வோம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இறுதியாகக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இத்தகைய கலந்துரையாடல்கள் அவசியம் என்று குறிப்பிட்டதுடன், இதன் ஊடாக பெருமளவு பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர், வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# திண்மக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்காக 58 நிலையங்களை அமைக்கும் பணி ஆரம்பம்




நாடளாவிய ரீதியில் திண்மக் கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்காக 58 நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இதனூடாக உள்ளூராட்சி மன்றங்களின் திண்மக் கழிவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்குமென பிரதியமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.

இதற்காக இந்த வருடத்தில் மாத்திரம் 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏன் இந்தியா, சீனா அல்ல!

இலங்கையின் வடக்கு, கிழக்கை தங்கள் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பக்கத்தில் உள்ள இந்தியாவின் - குறிப்பாக தமிழ் நாட்டின் - மக்கள் தொப்புள் கொடி உறவு போன்ற நெருக்கம் கொண்டவர்கள். மொழியால் மாத்திரம் அல்ல, பண்பாடு, பழக்கவழக்கங்கள், கலாசார கோலங்கள், வாழ்க்கை முறைகள், மத வழிபாடுகள் என்று பல அம்சங்களில் இரண்டு தரப்பினரினதும் வாழ்க்கைகள், வரலாறுகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

அத்தகைய தமிழ்நாட்டையும் இந்தியாவையும் நேசிக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், தங்கள் தாயக பிரதேசத்தில் சீனாவின் பிரசன்னத்தையும் நிலை கொள்ளலையும் அடியோடு எதிர்க்கிறார்கள். அதனை ஓர் ஆக்கிரமிப்பாகக் கருதுகிறார்கள்.

வெறுமனே இந்தியா பக்கத்து நாடு, சீனா தூரதேச நாடு என்ற பூகோள அமைவோ அல்லது தமக்கு நெருக்கமான பக்கத்து இந்தியாவோடு விரோதமான போக்கை சீனா கொண்டிருக்கின்றது என்பதோ இந்த வெறுப்பு நிலைக்குத் தனித்துக் காரணம் அல்ல. அதற்கு அப்பாலும் சில விடயங்கள் உள்ளன. அதனை நேற்று நாடாளுமன்றில் இலங்கைத் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோடி காட்டியிருக்கிறார்.

யுத்தப் பேரழிவினால் பெரும் அனர்த்தங்களையும், பாதிப்புகளையும் எதிர் கொண்ட தமிழர் தேசம் அதற்கு சர்வதேச நீதி கோரிப் போராடி வருகின்றது. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளைப் பேணல் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் நீதி, நியாயம் கிடைக்கச் செய்வதில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உலக நாடுகள் தொடர்ந்து தீவிரமாக முயற்சித்து வருகின்றன.

அந்த நீதியைச் செய்வதற்கு - கொழும்பு ஆட்சி பீடம் மறுத்து, அடாவடித்தனம் பண்ணி வருகையில், அந்த அட்டூழியப் போக்குக்கு நிபந்தனை ஏதுமின்றி ஆதரவளித்து நிற்கின்றது சீனா.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நடந்து முடிந்த 60ஆவது அமர்விலும் தமிழர்களுக்கு நீதி செய்யாத இலங்கையின் போக்குக்கு கவுன்ஸிலின் இப்போதைய 47 உறுப்பு நாடுகளில் ஆக இரண்டு மட்டுமே நிபந்தனையற்ற முறையில் வெளிப்படையாக ஆதரவளித்தன. அவை சீனாவும் எரித்திரியாவும்.

இதனை நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகச் சுட்டி காட்டிய சாணக்கியன், இத்தைய சீனாவோடு தமிழ் மக்கள் எப்படி இணங்கிப் போவர் என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் மூளை மையமான வடக்கில் பிரதான துறைமுகமாக இருக்கும் காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்கு நன்கொடையாக 68 மில்லியன் டொலர் பணத்தை இந்தியா கொடுக்கின்றது. ஆனால் அதை ஏற்று செயல்பட இலங்கை பின்நிற்கின்றது. மறுபுறத்தில் கண்டிக்கான அதிவேகப் பாதை அமைப்புக்கு இலங்கைக்கு சீனா 500 மில்லியன் டொலரை சீன எக்ஸிம் வங்கி ஊடாகக் கடனாக வழங்குகிறது.

சிங்கள தேசம் கடன் பெற்று தன் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு சீனா உதவுகிறது. ஆனால் வடக்கு கிழக்குக்கென தனியான உதவித் திட்டங்கள் எதையும் அத்தகைய மட்டத்தில் அது செய்யவில்லை. ஆயினும் இந்தியாவோ பிரதிபலன் எதிர்பாராமல் - கடனாக அல்லாமல் நன்கொடையாகவே - தமிழர் பகுதியில் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு பெருந்தொகையை தானாக வலிந்து வழங்க முன் வருகின்றது.

இத்தகைய பின்புலத்தில் இந்தியாவை தங்கள் ஆப்த - நெருக்கமான - உறவாகவும், சீனாவை அந்நிய எதிர்ப்புத் தரப்பாகவும் தமிழர்கள் கருதுவதில் தப்பு ஏது என்று சாணக்கியன் நியாயமான கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்பி இருக்கின்றார்.

இது அவரது கேள்வி மட்டுமல்ல, ஒவ்வொரு தமிழ் மகனதும் கேள்வியும் கூடத்தான்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது போலவே நாட்டின் இன, மத, மொழி, சமூகப் பெயர்கள், அடையாளங்களோடு அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டவையாக இயங்க அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையில் ஒரு தனி நபர் பிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினரான ரவி கருணநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. நேற்று அது நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் இருந்தது.

இந்தப் பிரேரணை எதிரணியால் கொண்டுவரப்பட்டதாகக் காட்டப்பட்டு, அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமாக்கப்பட்டால் 'தமிழரசுக் கட்சி', 'முஸ்லிம் காங்கிரஸ்', 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு', 'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' என்ற பெயர்களில் எல்லாம் கட்சிகள் இனிமேல் இயங்க முடியாது.

இந்தத் தனி நபர் பிரேரணை சில அரசுத் தரப்புகளின் தூண்டுதலினால் ரவி கருணநாயக்கா மூலம் நாசூக்காக முன்நகர்த்தப்படுவதாக ஊகித்துக் கொண்ட சிறுபான்மை இனக் கட்சிகள், இது ஆபத்தான விளைவை ஏற்படுத்தும் எனப் புரிந்து கொண்டு தங்களுக்குள் கூடி இதனை எதிர்ப்பதற்குத் திட்டமிட்டன.

'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியர் இராமசாமி சிவராஜா அந்தப் பத்திரிகையை வெளியிடும் லிபர்ட்டி பப்ளிகேஷன் நிறுவனத்தின் இயக்குநர்களின் ஒருவராக நியமிக்கப்பட்டமையையொட்டி அவர் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் நண்பர்களுக்கு கடந்த 7 ஆம் திகதி இரவு விருந்து ஒன்றை ஒழுங்கு படுத்தியிருந்தார்.

அங்குதான் இந்த தனிநபர் பிரேரணையின் ஆபத்து குறித்து சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் கூடிக் கதைத்திருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் தலைவர்கள் இந்த இரவு விருந்தில் கலந்து கொண்டிருந்த போதிலும், சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான், சாணக்கியன், மனோ கணேசன் போன்றோர் இந்த தனி நபர் பிரேரணையின் பின்னால் புதைந்து கிடக்கும் ஆபத்து குறித்து எச்சரிக்கை அடைந்து இது குறித்துத் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அந்த இரவு விருந்துக்கு வந்திருந்த மற்றைய சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்களோடும் கலந்துரையாடினர்.

அந்த இரவு விருந்தில் கலந்து கொண்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடன் அவர்கள் ஆலோசனை கலந்த போது அவர் ஒரு விடயத்தை அவர்களுக்கு தெரிவித்து, வியூகம் வகுத்து, வழி காட்டினார்.

இவ்வாறு இன, மத, மொழி, சமூக அடையாளங்களோடு அரசியல் கட்சிகள் இயங்குவதைத் தடை செய்வதற்கு வழி செய்யும் சட்டம் மூலம் ஒன்று 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட போதும் அது உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் முறியடிக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தை சுமந்திரன் விளங்கப்படுத்தினார்.

2009இல் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசு இதே போன்ற விடயத்தை 'நாடாளுமன்றத் தேர்தல் திருத்த சட்டமூலம்' என்ற பெயரில் சமர்ப்பித்தது. அதில் பல தேர்தல் திருத்தங்களுக்கு மத்தியில் கட்சிகள் மதம், மொழி, இனத்தின் பெயரில் இயங்கக் கூடாது என்ற விதிமுறையும் சேர்க்கப்பட்டிருந்தது.

அந்தச் சட்ட மூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்ய வேண்டும் என்று அப்போது எதிரணியிலிருந்த மங்கள சமரவீர அப்போது வரை அரசியலில் நுழையாத சுமந்திரனை அணுகினார்.

இந்தச் சட்டமூலத்தின் ஆபத்தை உணர்ந்து கொண்ட இலங்கைத் தமிழரசு கட்சியின் அப்போதைய செயலாளர் மாவை சேனாதிராஜாவும் சுமந்திரனோடு தொடர்பு கொண்டார். அச்சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் தமிழரசு இருந்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இருந்தது. அதனால் மங்கள சமரவீரவின் பெயரில் ஒரு வழக்கையும், தமிழரசு கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய இருவரின் பெயர்களில் இன்னொரு வழக்கையும் சுமந்திரனின் கீழிருந்த சட்டத்தரணிகள் குலாம் தாக்கல் செய்தது. இந்த இரண்டு மனுக்களின் சார்பிலும் சுமந்திரனும் அவரது கனிஷ்ட சட்டத்தரணியான விரயன் கொரயாவும் வாதிட்டனர்.

சுமந்திரன் அந்த வாதத்தில் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பு கவுன்ஸிலிற்கு உறுப்பினர்களை நியமிப்பது மற்றும் சுயாதீன ஆணை குழுக்களில் உறுப்பினர்கள் இடம் பெறுவது ஆகியவை தொடர்பான அரசமைப்பு ஏற்பாடுகளில் இரு பால் இனத்தவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அதே நேரத்தில், சிறுபான்மை இனங்களைப் பெயர் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதை அரசமைப்பே தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது என்பதை சுமந்திரன் சுட்டிக் காட்டினார். அரசமைப்பே அந்த இன வேறுபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றின் நலன் பேணுவது பற்றி வலியுறுத்தும் போது, அந்தந்த இன, மொழி, சமூக மக்களைப் பாதுகாப்பதற்காக - அவர்களின் அரசியல் உரிமைகளை பேணுவதற்காக - அவற்றின் பேரில் அரசியல் கட்சிகள் இயங்குவதை எப்படித் தடுக்க முடியும் என்று சுமந்திரன் முன் வைத்த வாதத்தை மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் ஏற்றுக் கொண்டது.

அப்போதைய சட்டமா அதிபரும் நிலைமையைப் புரிந்து கொண்டு, தேர்தல் திருத்தச் சட்டத்தில் மேற்படி மத, மொழி, சமூக பெயர் அடையாளங்களோடு அரசியல் கட்சிகள் இயங்கக் கூடாது என்ற விடயம் சட்ட மூலத்திலிருந்து விலக்கப்படும் என உயர் நீதிமன்றுக்கு வாக்குறுதி வழங்கினார். அது மாத்திரமல்ல, உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் இப்படி சேர்க்கப்பட மாட்டாது என சட்டமா அதிபர் உறுதி அளித்ததையும் சுட்டிக்காட்டி இருந்தது.

ஆகவே உயர்நீதிமன்ற வழிகாட்டலினால் முன்னைய அரசுகள் விலக்கிக் கொண்ட விவகாரத்தை மீண்டும் சட்டமாக முற்படுவது - தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிப்பது - தவறானது என சுமந்திரனின் ஆலோசனையில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் கடிதம் ஒன்று எழுதி சபாநாயகரிடம் கையளித்தனர். அந்த கடிதத்தில் சிறுபான்மை கட்சி தலைவர்களின் கோரிக்கை நியாயமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஒப்பமிட்டிருந்தார்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக சபாநாயகர் இந்த பிரேரணையை நேற்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து தவிர்க்க முடிவெடுத்தார். இதனையொட்டி நாடாளுமன்றத்தில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. சாணக்கியன் அப்போது ரவி கருணநாயக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுத்து உரையாற்றினர். உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு மாறான நடவடிக்கையை நகர்த்த ரவி கருணநாயக்க முயலுகின்றார் என அவர் சாடினார்.

இதனை அடுத்து நாடாளுமன்ற அலுவலர்கள் குழுவை மீண்டும் கூட்டி இதனை ஆலோசிக்க சபாநாயகர் முடிவு செய்தார்.

முதலில் நாடாளுமன்ற அலுவலர்கள் குழு கூடியது. அந்த குழுவில் அங்கம் வகிக்காத கட்சிகளின் தலைவர்களையும் அந்த கூட்டத்துக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதை அடுத்து சபாநாயகரின் அலுவலகத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

அங்கு ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான், சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மனோ கணேசன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா போன்றோர் ரவி கருணநாயக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுத்து கருத்து வெளியிட்டனர்.

அதனையடுத்து இப்படிப் பிரேரணையை தற்போதைய வடிவத்தில் எடுப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது. புதிய வடிவம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் தயாரித்து ரவி கருணநாயக்காவிடம் ஒப்படைப்பது என்றும், அதன் பின்னர் அதுபற்றித் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் நியாயமான முறையில் தீர்க்கப்படும் வரை மத, மொழி, சமூக, இனத்துவ அடையாளங்களோடு இயங்கும் அரசியல் கட்சிகளைத் தடை செய்யக்கூடாது என்ற நிலைப்பாடு பொதுவாக எட்டப்பட்டிருப்பதால் இந்தச் சுருக்கு இப்போதைக்கு சிறுபான்மைக் கட்சிகளுக்கு விழாது என்று நம்பலாம்.

---

## தமிழரசை மலினப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம்பந்தனோ, சுமந்திரனோ மாகாண சபை முறைமை நிராகரிக்கவில்லை. அதேநேரம் அது எமது தீர்வு என்றும் சொல்லவில்லை.

நான் கடந்த ஊடக சந்திப்பில் சொன்ன விடயங்களை ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் மறுதலிக்கவில்லை. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அதற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றது.

கஜேந்திரகுமார் 13ஆம் திருத்தத்தையும் அரசமைப்பையும் குழப்பி ஏக்கிய ராஜ்ஜிய மற்றும் ஒற்றையாட்சி என இரண்டையும் கூறுகின்றார். அது 38 வருடங்களாகத் தோல்வியடைந்த முறை என அவர் சொல்கின்றார்.

மாகாண சபை சட்டத்தின் மூலம்தான் தற்போது உள்ள உள்ளூராட்சி சபைகள் முறைமை காணப்படுகின்றது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கஜேந்திரகுமாரின் கட்சியும் போட்டியிட்டது. அது ஒற்றையாட்சி இல்லை என அவர் சொல்கின்றாரா என விளங்கவில்லை.

கஜேந்திரகுமார் முடக்கம், முடக்கம் எனச் சொல்கின்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதி முடக்கக் கூடாது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார்.

எங்களைப் பொறுத்தவரையில் 1987 இற்கு முன்னர் நாடாளுமன்றக் கட்டமைப்புக்குப் பின்னர் உள்ளூராட்சி சபை முறைமைதான் காணப்பட்டது.

1988 இற்குப் பின்னர்

07

## தமிழரசை மலினப்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

13ஆம் திருத்தச் சட்டமூலம் ஒரு கட்டமைப்பாக மாகாண சபை கொண்டு வரப்பட்டது.

நாடாளுமன்றுக்கு அடுத்ததாக உப சட்டவாக்க அலுவலகமாக அது காணப்பட்டது.

13ஆம் திருத்தமும் மாகாண சபையும் எமது அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு அல்ல. எமது கட்சியின் நிலைப்பாடும் அதுவே.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை உள்ளக விசாரணையை வலியுறுத்துவது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது எனக் கடிதத்தில் சொல்லியிருக்கின்றோம். இந்தக் கடிதம் நானும் சுமந்திரனும் மட்டும் கையொப்பம் வைத்து அனுப்பிய கடிதம் அல்ல. எமது கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பம் வைத்துள்ளனர்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை அரசு நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டும் என ஐ.நாவுக்குக் கடிதம் எழுதியுள்ளோம். பிறகு எவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டியைக் கைவிட்டு விட்டதாகக் கூற முடியும்.?

ஏக்கிய ராஜ்ஜிய நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பபட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும். அதேவேளை ஏக்கிய ராஜ்ஜிய ஒற்றையாட்சியும் அல்ல சமஷ்டி ஆட்சியும் அல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஒருமித்த நாடு என்றால் ஒரு நாடா? ஒன்றுக்கு மேற்பட்டவையையே ஒருமித்த நாடு என்பார். தமிழ் அர்த்தத்தை விட்டு சிங்களத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எனக்குப் போதிய அறிவு இருக்கின்றது. எனக்கு விளங்காது என கஜேந்திரகுமார் நினைப்பது பொருத்தமற்றது.

ஏக்கிய ராஜ்ஜிய பற்றி நிஹால் அபேசிங்க சுவிட்சர்லாந்தில் சொன்னதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கின்றார்.

நிஹால் அபேசிங்க உத்தியோகபூர்வமானவரா? அநுரகுமார திஸாநாயக்க, பிமல் ரத்நாயக்க சொல்ல வேண்டும். மக்களைத் திசை திருப்புகின்றனர், திசை திருப்புகின்றனர் எனச் சொல்லி காங்கிரஸே குழப்புகின்றது.

1988 நவம்பரில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் மாகாண சபை நடைமுறையில் உள்ளதுதானே.

அண்மையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா என கஜேந்திரகுமாரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டபோது, இல்லை கேட்கமாட்டோம் என அவர் சொல்லி இருக்கலாம்தானே. அங்கு நான் முதல்வர், உறுப்பினர் எனப் போட்டியிடுகின்றனர். போட்டியிடுவது பற்றி தெளிவாகச் சொல்லலாமே ஏன் மழுப்புகின்றார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது எனக்குத் தனிப்பட்ட மதிப்பு இருக்கின்றது. அதைப் பேண விரும்புகின்றேன்.

எங்கள் கட்சிக் கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமாருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக்கொடுக்கவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே. தந்தை செல்வா போய் விட்டார். நாங்களும் போய் விடுவோம். ஆனால், தமிழரசுக் கட்சி பலமாகத் தொடர்ந்து தமிழ் மக்கள் நலனுக்குக் குந்தகமிழைக்காத வகையில் செயற்படும். எங்களை அடிப்பதில் மினக்கெடாமல் செயற்படுங்கள்.

சமஷ்டி எங்கள் இலக்கு. சீதனம் முதுசம் எனச் சொல்ல முடியாதே. ஒன்றாகப் பயணிப்போம். தமிழரசுக் கட்சி எந்த இலக்குக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த இலக்கில் இருந்து வழுவாமல் பயணிப்போம்." – என்றார்.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்தாரியை நாடாளுமன்றில் வெளிப்படுத்துங்கள்!

## தயாசிறி ஜயசேகர எம்.பி. வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பிரதான சூத்திரதாரி கண்டறியப்பட்டிருந்தால், அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக் குழுவில் நானும் உறுப்பினராக இருக்கின்றேன். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன அந்தக் குழுவுக்கு வருகை தந்திருந்தார்.

நிஷாம் காரியப்பர் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார் என அவர் கூறினார். இந்தநிலையில் ஊடகங்கள் எம்மைத் தொடர்புகொண்டு இதுபற்றி வினவுகின்றன. இதன் பின்னணியில் (தாக்குதலின்) இந்தியா இருந்தது என அவர் (ரவி செனவிரத்ன) கூறவில்லை எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் அவ்வாறான அறிவிப்பை வெளியிடவில்லை. உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழுவுக்கு வந்து இதனை சொல்ல வேண்டியதில்லை. பிரதான சூத்திரதாரி யாரென நீதிமன்றத்திடம் சென்று கூறவேண்டும்.

இதேவேளை, தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இது தவறான விடயம்." – என்றார்.

## பேச்சுகளின் பின்னரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாங்கள் செய்த நல்ல விடயங்களைப் பாராட்டியதும் இல்லை. அவர்கள் இணைந்து செயற்பட்டதும் இல்லை. கள்வர்களைக் கைது செய்யும்போதே அவர்கள் இணைந்து செயற்பட்டனர்.

நான்கு – ஐந்து மாதங்கள் பேச்சுவார்த்தைகளின் பின்னரே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நாட்டின் பொருளாதாரம், தேசிய ஒருமைப்பாடு, போதைப்பொருளைக் கட்டுப்படுத்தல், டிஜிட்டல் மயப்படுத்தல், அரச சேவையைத் துரிப்படுத்தல் போன்ற முன்னிலை காரணங்களைக் கருத்தில் கொண்டு பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் புதிய திறமையானவர்களுக்கு அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு வழங்குவதென்ற பொது இணக்கப்பாட்டின் பிரதிபலனே இந்த மாற்றம்.

இந்தப் புதிய அமைச்சுகள் பாரிய பொறுப்பாகும். துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சுகள் பெரும் சவாலானதாகும். இதில் மக்கள் தொடர்புகள் குறைவானதாகும். ஆனால், நகர அபிவிருத்தி மக்களுடன் தொடர்புபட்டதாகும். அதனால் வேலைத்திட்டங்கள் அதிகமானதாகும்.

இந்த அமைச்சில் இதற்கு முன்னர் இருந்தவர்கள் அமைத்துள்ள திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதே எனது வேலைத் திட்டமாக இருக்கும்." – என்றார்.

## எலிக்காய்ச்சல் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி, காலி, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, கம்பஹா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் எலிக்காய்ச்சல் பரவுவதற்கான அதிக வாய்ப்புள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான மாத்திரைகள் நாட்டில் போதுமான அளவு கிடைப்பதாகவும், நெல் வயல்கள் போன்ற பகுதிகளில் வேலை செய்பவர்கள் முறையாக மருந்தை உட்கொள்ளுமாறும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

ஒரு மாதத்துக்குப் 10 ஆயிரம் மாத்திரைகள் தேவைப்படுகின்றன எனவும், மூன்று மாதங்களுக்குத் தேவையான மாத்திரைகள் தற்போது கையிருப்பில் இருக்கின்றன எனவும், ஒன்பது மாதங்களுக்குத் தேவையான மற்றொரு இருப்பு விரைவில் பெறப்படும் எனவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.

# அதிக மாத்திரைகளை உட்கொண்ட வயோதிபப் பெண் ஒருவர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் அதிகளவான மாத்திரைகளை உட்கொண்ட வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


மானிப்பாய் – சாத்தாவத்தை பகுதியை சேர்ந்த பாலசுந்தரம் சிந்தாத்துரைமேரி (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் கொடுத்த மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக வீட்டில் வைத்து உட்கொண்டுள்ளார்.



அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.







# காபூலில் உள்ள தூதரகத்தை இந்தியா மீண்டும் திறக்கும்

## ஜெய்சங்கர் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள இந்திய தூதரகத்தை மீண்டும் திறக்க உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

6 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா வந்துள்ள ஆப்கானிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் அமிர் கான் முட்டாகி, புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போது எஸ்.ஜெய்சங்கர் கருத்து தெரிவிக்கையில்,

“ஆப்கானிஸ்தானின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்துக்கு இந்தியா முழுமையாக உறுதிபூண்டுள்ளது. இரு நாடுகளுக்கு இடையேயான நெருக்கமான ஒத்துழைப்பு ஆப்கனின் வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பங்களிக்கிறது. இதை மேம்படுத்த, காபூலில் உள்ள இந்திய தொழில்நுட்ப அலுவலகத்தை தூதரக அந்தஸ்துக்கு இந்தியா உயர்த்த உள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வளர்ச்சி மற்றும் வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகள் இரு நாடுகளுக்கும் பொதுவானவை. எனினும், இரு நாடுகளும் எதிர்கொள்ளும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலால் இவை ஆபத்தில் உள்ளன. எனவே, இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ள இரு நாடுகளும் தங்கள் முயற்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

கடந்த ஏப்ரல் 22 திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆப்கனிஸ்தான் கண்டனம் தெரிவித்தது. இந்தியாவின் பாதுகாப்பு கவலைகள் குறித்த உங்கள் உணர்திறனை நாங்கள் பாராட்டுகிறோம். ஏப்ரல் 2025 இல் ஆப்கனிஸ்தான் நாட்டினருக்கு புதிய விசா தொகுதியை இந்தியா அறிமுகப்படுத்தியது. அதன்படி, மருத்துவம், வணிகம், மாணவர் விசாக்களை இந்தியா அதிகமாக வழங்கி வருகிறது.

பாகிஸ்தானில் இருந்து ஆப்கன் அகதிகளை அந்நாடு திருப்பி அனுப்புவது கவலை அளிக்கிறது. அவர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டவும், அவர்களின் வாழ்க்கையை மீண்டும் மேம்படுத்தவும் இந்தியா தொடர்ந்து உதவும். ஆப்கனிஸ்தான் இந்தியாவின் அண்டை நாடு. அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் இந்தியா ஆழமான ஆர்வத்தைக் கொண்டுள்ளது.

ஆப்கனிஸ்தானின் சுகாதாரத்துறைக்காக ஆறு புதிய திட்டங்களை செயல்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளது. அதன் விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். கிழக்கு ஆப்கனில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இந்தியா தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கும். அங்கு குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வதில் நாங்கள் உதவ விரும்புகிறோம்.” என்று தெரிவித்தார்.

2021 இற்கு முன்பு, ஆப்கானிஸ்தானில் காபூலில் தூதரகமும், மசார் இ ஷெரீப், கந்தஹார், ஜலாலாபாத், ஹெராத் ஆகிய நகரங்களில் துணை தூதரகங்களையும் இந்தியா இயக்கி வந்தது. தற்போது காபூல் தூதரகத்தை செயல்பாட்டுக்குக் கொண்டு வர இந்தியா திட்டமிட்டுள்ளது. எனினும், எப்போது அது செயல்பாட்டுக்கு வரும் என்பதை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதிப்படுத்தவில்லை.

# போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் நெதன்யாகுவை வாழ்த்தினார் மோடி



காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் குறித்து விவாதிக்கும் பாதுகாப்பு அமைச்சரவைக் கூட்டத்தை இடை நிறுத்தி வைத்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்காக எட்டப்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிரதமர் மோடி இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை வாழ்த்தினார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே இஸ்ரேலுக்கு அளித்த ஆதரவிற்காக இந்தியப் பிரதமருக்கு நெதன்யாகு நன்றி தெரிவித்துள்ளார்.



# பிரதமர் மோடி இஸ்ரேல் பிரதமரை பாராட்டியமை அதிர்ச்சி அளிக்கிறது

## செல்வப்பெருந்தகை தெரிவிப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் பாராட்டியுள்ளமை அதிர்ச்சியளிக்கிறது என தமிழ் நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"காசா பகுதியில் நடைபெற்று வரும் மனிதாபிமானமற்ற பேரழிவும், பாலஸ்தீன மக்கள் மீது நிகழ்த்தப்படும் இனப்படுகொலையும் உலகம் முழுவதும் கண்டனத்திற்கு உள்ளாகி வரும் நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் பாராட்டியிருப்பது கடும் அதிர்ச்சியளிக்கிறது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான அமைதி ஒப்பந்தத்தை வரவேற்பதாகவும், அது நெதன்யாகுவின் "சிறந்த தலைமையின் விளைவாகும்" என்றும் மோடி தனது "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டுள்ளார். இனப்படுகொலை செய்து ஆயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள், அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்த நெதன்யாகுவை இவ்வாறு பாராட்டுவது, இந்தியாவின் பாரம்பரியமான மனிதநேய வெளியுறவுக் கொள்கைக்கு எதிரானது.

பாலஸ்தீன மக்களின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் இந்தியா 1988 ஆம் ஆண்டு முதலே அங்கீகரித்துள்ளது. அந்த வரலாற்று நிலைப்பாட்டை புறக்கணித்து, இனப்படுகொலை செய்த ஆட்சியாளரைப் புகழ்வது, அகிம்சையைப் போதித்த இந்தியாவிற்கு கடுமையான அவப்பெயரை உண்டாக்கும். இந்தியா மீது உலகநாடுகள் வைத்திருக்கும் நல்லெண்ணத்தைக் கெடுக்கும் செயலாகும்.

இந்தியாவின் குரல் எப்போதும் மனிதநேயம், அமைதி, நீதிக்காக இருக்க வேண்டும் இனப்படுகொலை செய்த ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக அல்ல. எனவே, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை பாராட்டிய பிரதமர் நரேந்திர மோடியின் செயலை, தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி சார்பில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்." எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நோபல் பரிசு கனவு கலைந்தது

நோபல் பரிசை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெரிதும் எதிர்பார்த்திருந்த நிலையில், நேற்று அமைதிக்கான நோபல் பரிசு தொடர்பில் அறிவிப்பு வெளியாகியது.

2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு வெனிசுவேலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சோடா தெரிவாகியுள்ளார்.

சுமார் 7 போர்களைத் தான் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகக் குறிப்பிட்டு தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி வந்தார்.

அவர் மாத்திரம் இன்றி பாகிஸ்தான், இஸ்ரேல், ஆர்மீனியா, மற்றும் அசர்பைஜான் உள்ளிட்ட நாடுகளும் ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்க வேண்டும் என கூறிவந்தன.

காசாவில்போரைமுடிவுக்குக்கொண்டு வரும் நோக்கில் நேற்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலும் ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.




எனினும் இவ்வாண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுவேலா எதிர்க் கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சோடா வசமாகியது.

வெனிசுலா மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை ஊக்குவித்ததற்காகவும், சர்வாதிகாரத்தில் இருந்து ஜனநாயகத்திற்கு அமைதியான மாற்றத்தை நோக்கி அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக நோபல் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் நோபல் பரிசுக்காகக் காத்திருந்த ட்ரம்பின் கனவு கலைந்தது.

வரலாற்று ரீதியாக, நான்கு அமெரிக்க ஜனாதிபதிகள் மட்டுமே அமைதிக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

இவர்களில் தியோடர் ரூஸ்வெல்ட், உட்ரோ வில்சன், ஜிம்மி கார்ட்டர் மற்றும் பராக் ஒபாமா ஆகியோர் அடங்குவர்.

அந்த வரிசையில் ட்ரம்ப் இடம் பிடிப்பாரா என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நேற்று அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.



# போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறை; காசாவில் ஏற்பட்ட புதிய திருப்பம்

காசாவில் தற்போது போர் நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி அதன் படைகள் திரும்பப் பெறப்படுவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எகிப்து, கட்டார், துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வீரர்களுடன் சேர்ந்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதைக் கண்காணிக்க அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளுக்கு 200 படை வீரர்களை அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த அமெரிக்க துருப்புக்களும் காசாவிற்குள் செல்ல விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணயக்கைதிகளையும் விடுவித்தல், இஸ்ரேலிய இராணுவம் ஒப்புக் கொள்ளப்பட்ட இடத்திற்கு திரும்பப் பெறுதல் மற்றும் சில பாலஸ்தீன கைதிகளை விடுவித்தல். பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு முன்பு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முறையான அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என்று ஹமாஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.














# பருத்தித்துறையில் வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல் தேசிய மக்கள் சக்தி அமைப்பாளரும் தந்தையும் படுகாயம்

**(இரா.மயூதரன்)**

போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க முற்பட்டதன் காரணமாக தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை அமைப்பாளர் மற்றும் அவரது தந்தை மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தும்பளை சேந்தார்வளவு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தில் தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரும் கொட்டடி மீனவர் சங்க செயலாளருமான யேந்திரன் பிரதீபன் (வயது 29) மற்றும் அவரது தந்தையான சுப்பிரமணியம் யேந்திரன் (வயது 55) ஆகியோர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு குழுவில் டற்தொழில்சங்க செயலாளரும் இருப்பதாகவும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு அவர் செயல்பட்டதாக தெரிவித்து தொலைபேசி மூலம் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில் அது தொடர்பில் பொலிஸ் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக கேட்டுவிட்டு வீடு திரும்பிய நிலையில் வியாழக்கிழமை இரவு வாள் வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.



# மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து செல்லும் மாணவர்கள் பாதுகாப்பு தலைக்கவசம் அணியவும்

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு, மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து செல்லும் மாணவ, மாணவிகள் பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து செல்லுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி, இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், பாடசாலைகளுக்கு செல்லும் மாணவ மாணவிகள் தங்களது பாதுகாப்பை கருதி, போக்குவரத்து சட்டங்களை மதிக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்த சட்டங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.



# நாட்டில் பாடசாலை மாணவர்களில் 60 வீதமானவர்களுக்கு மன அழுத்தம்

ஒரு சமூகத்தின் நீண்டகால அபிவிருத்திக்கு உளநல ஆரோக்கியம் மிக முக்கியம் என, கொழும்பு பல்கலைக் கழகத்தின் சமூகவியல்துறை பேராசிரியர் மொஹம்மட் மஹீஷ் தெரிவித்துள்ளார்.

உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பட்சத்தில், ஒரு அபிவிருத்தியடைந்த சமூகத் தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, நாட்டில் பாடசாலை மாணவர்களில் சுமார் 60 வீதமானவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள் ளனர் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

அவர்களில் 24 சதவீதமானவர்கள் சிரேஷ்ட மாணவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கல்வி அழுத்தம், குடும்பப் பிரச்சினைகள், சமூக ஊடக பயன்பாடு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவை



மன அழுத்தத்துக்கான முக்கிய காரணங்களாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.



# லஞ்ச, ஊழல் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்தில் சிறப்புரிமை மீறப்படவில்லை என்கிறார் சபாநாயகர்

லஞ்ச,ஊழல் பணிப்பாளர் நாய கத்தின் நியமனத்தில் சிறப்புரிமை கள் மீறப்படவில்லை என சபாநாய கர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்துள் ளார்.

தயாசிறி ஜயசேகர முன்வைத்த குற்றச்சாட்டு, நாடாளுமன்ற சிறப்புரி மைகள் குழுவிற்கு பரிந்துரைக்கப்ப டாது என சபாநாயகர் நாடாளுமன்றத் தில் நேற்று அறிவித்தார்.

இலஞ்ச,ஊழல்விசாரணைஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக ரங்க திசாநாயக்க நியமிக்கப்பட்டதன் மூலம் நாடாளுமன்றம் தவறாக வழிநடத் தப்பட்டதாக நாடாளுமன்ற உறுப் பினர் தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு முன்வைத்தார்.

இந்த நிலையில் மேற்படி விடயம் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழு விற்கு பரிந்துரைக்கப்படாது என நாடா ளுமன்றத்தில் சபாநாயகர் நேற்று றிவித்தார்.

நியமனம் குறித்த தீர்மானம் நாடா ளுமன்றத்தின் கீழ் எடுக்கப்படவில்லை எனவும் அரசியலமைப்பு பேரவையின் கீழேயே நியமனம் வழங்கப்பட்டதாகவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

# பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு ஞாயிறு மாலை நல்லூரில்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர் பான உரையரங்கு நாளை (12) ஞாயிற் றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உரையரங்கு நாளை (12) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை பருத் தித்துறை வீதியில், நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந் துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உரையரங்கில் "தமிழ் மக் களும் செம்மணியும்" என்ற தலைப் பில் சுயாதீன ஊடகவியலாளர் து.ஜெய ராஜ் (ஜெரா), "தமிழ் மக்களும் தேசிய மக்கள் சக்தியின் ஒருவருடகால ஆட்சி யும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேரா சிரியர் கே.ரி. கணேசலிங்கம், "தமிழ் மக்களும் புதிய அரசியல் அமைப்பும்" என்ற தலைப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோர் உரை யாற்றவுள்ளனர்.

இந்த உரையரங்கு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங் கரநேசன் தலைமையில் நடைபெற வுள்ளது.




# பெண் குழந்தைகளின் கனவுகள் உலகை மாற்றும் திறவுகோல்கள்

**சிந்துஜா சதீஸ்வரன்**
(3 ஆம் வருடம், ஊடக கற்கைகள் துறை, யாழ் பல்கலைக்கழகம்)

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!“ – என்ற இந்த வரிகள் வெறும் கவிதை அல்ல் இது ஒரு புரட்சிக்காக – ஒரு சமூக விடுதலைக்காக – பல தசாப்தங்களுக்கு முன்பே மகாகவி பாரதி கண்ட கனவாகும். அதாவது, பெண்ணின் இழிவு நீங்கி அவளது முழுமையான ஆற்றல் இந்த உலகிற்கு வெளிப்பட வேண்டும் என்பதேயாகும்.

அந்த வகையில் பெண் குழந்தைகளை போற்றும் நோக்கத்தோடு இன்றைய தினமான அக்டோபர் 11 “சர்வதேச பெண் குழந்தைகள் தினம்“ ஆக அனுசரிக்கப்படுகிறது.

இது வெறும் ஒரு நினைவு நாள் அல்ல. உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான சிறுமிகளின் குரல், ஆசை, உரிமை, சமத்துவம் ஆகியவற்றுக்காக ஒலிக்கும் நாளாகும். பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார அநீதிகளை வெளிக்கொண்டு வருவதோடு அவர்களுக்கு சமமான வளர்ச்சிச் சூழலை உருவாக்குவதற்கும், சம வாய்ப்பு, உரிமை, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யவும், அவர்களுக்கு எதிரான பாகுபாடுகள் குறித்து உலகளவி-ல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத் தினம் கொண்டாடப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 2011 டிசம்பர் 19 அன்று அக்டோபர் 11 ஆம் சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அறிவித்து 2012 முதல் இன்று வரை இந்த நாள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இந்த உண்மை இன்று எத்தனை பேரின் மனதில் உயிரோடு உள்ளது? அதன் அர்த்தம் சமூக வாழ்வில் பிரதிபலிக்கிறதா? பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசியல் தலைவர்கள், ஊடகங்கள், சமூகங்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து இந்தப் பொறுப்பை உண்மையிலேயே நிறைவேற்றுகிறோமா? – இது போன்ற பல கேள்விகள் எழுவதற்கு தோன்றலாம்.

ஒருகாலத்தில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு, பெண்ணடிமை தலைதூக்கி இருந்தது. பெண் குழந்தைகள் என்றாலே குடும்பத்திற்கு சுமையாக பார்க்கப்பட்டது. சில இடங்களில் பெண் பிள்ளைகள் பிறந்தாலே கள்ளிப்பால் ஊட்டிக் கொல்லும் வழக்கமும் முன்னொரு காலத்தில் காணப்பட்டுத்தான் வந்துள்ளது.

பெண்ணியம் சார்ந்து பலரும் கருத்துக்களை முன்வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இதனால் காலப்போக்கில் மாற்றம் ஏற்பட்டது. பெண்ணை அடிமையாகப் பார்த்த சமூகம் இன்று சற்று மாறி வருகிறது. எனினும் பெண் குழந்தைகள் மீதான எண்ணம் முழுமையாக மாறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் இன்னும் குழந்தைத் திருமணம், பெண் சிசுக்கொலை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற கொடுமைகள் ஆங்காங்கே அரங்கேறுவதை சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள் மற்றும் வெகுசன ஊடகங்களின் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

ஒரு பெண் குழந்தையின் வாழ்க்கையில், அவள் பிறந்ததிலிருந்தே சமத்துவமின்மை என்ற நிழலைச் சந்திக்க நேரிடுகிறது. பாலினப்பாகுபாடு, ஊட்டச்சத்து குறைபாடு, கட்டாய உழைப்பு என அவளது எதிர்காலச் சிறகுகளை ஒடுக்கும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறாள். இன்று பல இடங்களில் பெண் குழந்தைகள் கல்வி பெறுவதற்கான வாய்ப்பிலிருந்து கூட விலக்கப்படுகின்றனர். சில இடங்களில் அவர்கள் இன்னும் “பெரும் சுமை“ எனப்




தொடர்ச்சி▼

# பெண் குழந்தைகளின் கனவுகள் உலகை மாற்றும் திறவுகோல்கள்




தொடர்ச்சி▲


பார்க்கப்படுகிறார்கள்.

இத்தகைய அநீதிகளுக்கு எதிராக மாற்றங்களை ஏற்படுத்த பல்வேறுபட்ட சமூகங்கள் விழிப்புணர்வை உருவாக்கி வருகின்றன. ஆனால் மனப்போக்கின் மாற்றம்தான் இன்னும் ஏற்படத் தாமதமாகிறது. இவ்வாறான ஒடுக்குமுறைகளில் இருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாப்பது என்பது ஒரு நாட்டினுடனோ அல்லது அரசாங்கத்தினுடனோ மட்டும் முடிந்துவிடப் போவதில்லை. அது நம் ஒவ்வொருவர் வீட்டிலும், நம் குடும்பத்திலும் இருந்துதான் தொடங்க வேண்டும். அதாவது பெற்றோர் ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையே வேறுபாடின்றி இருவருக்கும் சமமான கல்வி, சமமான ஊக்கத்தை வழங்குவதோடு அவர்களது கனவுகளுக்கு உரமூட்டி பாரம்பரிய வேலைகளைத் தாண்டி, அறிவியல், தொழில்நுட்பம், கணிதம் போன்ற துறைகளில் அவர்கள் பிரகாசிக்க ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அவர்கள் வெளியே செல்லும்போது, தங்கள் கருத்தைச் சொல்லும்போது, அவர்கள் பாதுகாப்பாகவும், மதிப்புமிக்கவர்களாகவும் உணர்வதை உறுதி செய்ய வேண்டும்.

பெண் குழந்தையின் சிரிப்பு ஓர் இல்லத்தின் ஒளி. அவளின் நம்பிக்கை ஒரு சமூகத்தின் சக்தி. அந்த ஒளி மங்கிவிடாமல், அந்த சக்தி தணியாமல் காப்பாற்ற வேண்டியது நம் கடமை. அந்தக் கடமையை நினைவூட்டும் நாளாகவே "சர்வதேச பெண் குழந்தைகள் தினம்" இருக்கிறது. இந்த உலகம் மடமை என்னும் இருளில் இருந்து முழுமையாக விடுபட வழிவகுப்போம். எனவே, இந்த நாளை ஒரு நிகழ்வாக அல்லாது ஒரு பொறுப்பாகப் பார்க்க வேண்டும். நமது ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு முடிவும், ஒரு பெண் குழந்தையின் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில் இருக்கட்டும். ஏனெனில், இன்று நாம் அவர்களின் உரிமைகளை மறந்துவிட்டால், நாளை மனிதநேயத்தின் அடிப்படை உணர்வையே இழந்துவிடுவோம்.

# வவுனியாவில் சிறுவனைக் காணவில்லை பூவரசங்குளம் பொலிஸில் முறைப்பாடு






(கி.வசந்தன்)

வவுனியாவில் சிறுவனை காணவில்லை என பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, இயங்கராவூர், கற்குளம், சாளம்பைக்குளத்தை சேர்ந்த ஜெயசீலன் அபிஷேக் என்ற 16 வயது சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்றுக் காலை 04.30 மணிக்கு வீட்டில் உறங்கிய மகனை காணாத நிலையில் அப்பகுதி முழுவதும் பெற்றோர் மற்றும் உறவினர்களால் தேடியும் கிடைக்காத நிலையிலேயே சிறுவனின் பெற்றோரால் வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுளது. பெற்றோர் மகனைத் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இந்தச் சிறுவன் தொடர்பில் தகவல் ஏதும் அறிந்தால் சிறுவனின் தாயின் தொலைபேசி இலக்கம் 0761698019க்கு அல்லது சிறுவனின் மாமாவின் தொலைபேசி இலக்கம் 0774909955 அழைத்து உதவுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# பாண்டிருப்பு திரௌபதை அம்மன் தீ மிதிப்பு நிகழ்வு பக்தி பூர்வமாக

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் புடை சூழ நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

மகா பாரதக் கதையினை மையமாக கொண்டு பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய உற்சவம் 18 தினங்கள் நடை பெறுவது வழக்கமாகும். கடந்த செப்டம் பர் 23 ஆம் திகதி திருக்கதவு திறத் தல், கொடியேற்றத்துடன் ஆலய உற் சவம் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த உற்சவத்தில் பாண்டவர்கள் நாடு, நகர் இழந்து வனவாசம் செல்லும் நிகழ்வு புதனன்று நடைபெற்றதும் குறிப் பிடத்தக்கது.

நேற்று முன்தினம் 9ஆம் திகதி அருச்சுனன் தவநிலை செல்லல் நிகழ்வு இடம்பெற்றது.

பாண்டவர்கள், திரௌபதை, கிருஷ் ணர், தேவாதிகள் தீ மிதிப்பில் ஈடுபடும் நிகழ்வு நேற்று நடைபெற்றமை குறிப் பிடத்தக்கது.

இன்று சனிக்கிழமை தீக்குழிக்கு பால்வார்க்கும் பாற்பள்ளயம் சடங்கு டன் உற்சவம் நிறைவுபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.











# வடக்கு, கிழக்குப் பகுதிக்கும் அதிவேக நெடுஞ்சாலைகள்!


## அமைக்கும்படி சாணக்கியன் சபையில் வற்புறுத்தல்

வடக்கு மற்றும் கிழக்குக்கான அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அதி வேக நெடுஞ்சாலைகள் தொடர்பான விவாதத்தின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இது மிக முக்கியமான ஒரு முன்மொழிவு. உண்மையிலே இந்த இரத்தினபுரி பிரதேசத்திற்கு அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்க உள்ளமையை நாங்கள் வரவேற்கின்றோம். அதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை.

ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தளவில் பிரதான போக்குவரத்து அபிவிருத்தி இன்மை என்பது அந்த அந்தப் பிரதேசங்கள் அபிவிருத்தி அடையாமல் இருப்பதற்கான பிரதானமான காரணம். அது போக்குவரத்தில் இருக்கின்ற சிக்



கல்கள்தான்.

எட்டு மணித்தியாலம் கொழும்பில் இருந்து வருவதற்கும் செல்வதற்கும் எடுக்கின்றது. 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கான ஒரு முன்மொழிவு இருந்தது.

மொனராகல பிரதேசத்தின் ஊடாக மட்டக்களப்புக்கு இந்த அதிவேக நெடுஞ்சாலையை கொண்டு வருவதற்கும், அதே நேரத்தில் தம்புள்ளை ஊடாக வடக்கை நோக்கி ஓர் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதாகவும் சொல்லப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பாகவும் அரசாங்கம் அதனுடைய கவனத்தைத் திருப்ப வேண்டும்.

வட கிழக்கு மக்கள் சீனாவை எதிர்ப்பதற்கான காரணம் சீனா தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையை மிக நீண்ட காலமாக கொண்டிருப்பதாலும், சர்வதேச மட்டங்களிலும் ஐ.நா. அமர்வுகளிலும் எம் மக்கள் மீதான எதிர்ப்பை நீண்ட காலம் வெளிப்படையாக காட்டி வருவதாலும் ஆகும். அதன் காரணமாகவே வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் சீனா மீது வெறுப்புடன் உள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள் அன்றாட பாவனைக்கு ஏற்றால் போல் புனரமைக்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டு, இதற்கான துரித போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றேன். - என்றார்.

# நம் மத்தியில் உள்ள மாற்றுத் திறனாளிகள் குறித்து சமூகமாகச் சிந்திப்பதற்கு நாங்கள் தவறிவிட்டோம்

## பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் விசனம் தெரிவிப்பு

**(பழுவூரான்)**

ஒரு காலத்தில் வட- கிழக்கு மக்கள் ஒரு தேசமாக சிந்தித்து மாற்றுத் திறனாளிகளைக் கையாண்டது. அந்தச் சமூகம் இன்று மாவட்டம், கிராமம் என்று பிரிந்து நின்று தனித் தனியாகச் செயல்படுவதால் மாற்றுத் திறனாளிகள் குறித்து சிந்திக்கத் தவறி விட்டோம் என சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி ஏர்முனை மாற்று திறனாளிகள் அமைப்பில் உள்ள குடும்பங்களில் ஏற்படும் மரண சடங்குகளை நடத்துவதற்கான உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

உலகில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகள் உள்ளனர் எனக் கூறப்படுகிறது. அதாவது உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட 15 வீதம் பேர் மாற்று திறனாளிகளாக உள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை சுமார் 17 இலட்சம் பேர் மாற்றுத் திறனாளிகளாக இருக்கின்றனர் என்ச்க் கூறப்படுகிறது. அதில் 15 இலட்சம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 2019 ஆம் ஆண்டு வரை சுமார் 7,444 பேர் மாற்றுத் திறனாளிகளாக இருந்தனர் என்ச்க் கூறப்படுகிறது. அது



இன்று இன்னும் அதிகரித்திருக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் மாற்றுத் திறனாளிகளாக மாறியவர்கள் 4,000 பேர் வரை உள்ளனர். ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஏர் முனை மாற்று திறனாளிகள் அமைப்பில் பதிவு செய்யப்பட்டவர்கள் 853 பேர் உள்ளனர். பதிவு செய்யப்படாத மாற்றுத் திறனாளிகள் 138 பேர் உள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் யுத்தம் முடிவுக்கு வந்து பதினாறு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் மாற்றுத் திறனாளிகளைக் கையாள்வதில் நாம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம்.

ஒரு காலத்தில் வட- கிழக்கு மக்கள் ஒரு தேசமாக சிந்தித்து செயற்பட்டதால் மாற்றுத் திறனாளிகளை - அவர்களுக்கான கட்டமைப்புகளை உருவாக்கி கையாண்டமையால் மாற்றுத் திறனாளிகள் குறித்த பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிந்தது.

ஆனால் இன்று மாவட்டம், கிராமம் என்று பிரிந்து நின்று தனித் தனியாகச் செயல்படுவதால் மாற்றுத் திறனாளிகள் குறித்துச் சிந்திக்கத் தவறி விட்டோம். இருந்தும் இங்கு ஒன்றிணைந்துள்ளவர்கள் எமது மாற்றுத்திறனாளிகள் குறித்து சிந்தித்தமையால் அவர்களுக்கான உதவிகளைச் செய்து வருகின்றனர் .

மிக முக்கியமாக ஏறாவூர்ப்பற்று ஏர் முனை மாற்று திறனாளிகள் அமைப்பில் உள்ள குடும்பங்களில் ஏற்படும் மரணச் சடங்குகளை நடத்துவதற்கான உதவிகளை செய்வதற்கு ஒரு சங்கம் உருவாக்கப்பட்டு அதற்கான உதவிகளை பெற்று கொடுத்து வருகின்றோம். அந்த வகையில் ஏர் முனை மாற்று திறனாளிகள் அமைப்பினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய பிரான்ஸ் நாட்டில் உள்ள துளிர் அமைப்பின் ஊடாக புலம்பெயர் உறவுகள் வழங்கிய நிதி உதவிகளைக் கொண்டு செங்கலடி சேவகம் தொண்டு நிறுவனத்தின் ஊடாக நான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான கூடாரம், கதிரைகள், சமையல் பாத்திரங்களை பெற்றுக் கொடுத்துள்ளோம். இதேபோல் இங்குள்ள பலரும் மாதாந்த உதவிகளை செய்து வருகின்றனர். எனவே தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. ஒரு தேசமாக ஒன்றிணைந்து மாற்று திறனாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைவரும் முன்வாருங்கள். - என்றார்.



# போராடுகிறது மாலதி...!

**இந்திய அமைதிப் படைக்கு எதிராக போராடி 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி மடிந்த முதல் பெண் மாவீரர் மாலதி அவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரிக்கப்படுகிறது.**

தமிழினத்தின் காவலர்களாய்
பெண்களும் சரித்திரம் – படைக்க
முடியுமென வீட்டை விட்டு
களமாட புறப்பட்டு – தளபதியாய்
செயற்பட்டாய் மாலதி!

பாரத தேசம் அமைதி – காக்கவென
ஜே.ஆர் – ராஜீவ் கூட்டு சதியில்
தமிழர் தேசம் வந்து – தழிழர்
இரத்த வாடை கண்ட போது– வீரப்
பெண்ணானாய் மாலதி!

கோப்பாயில் நேருக்கு நேராக
இந்திய படையை நிலைகுலைய
வைத்து போராடி– விழுப்புண்
அடைந்த போதும் மணணுக்காக
சயனட் அருந்தினாய் மாலதி!

முப்பததெட்டு வருடங்கள்
உருண்டோடி விட்டாலும் – தமிழர்
தேசத்திற்கு மீட்சியில்லை
இன்றும் இலட்சியத்திற்காய்
போராடுகிறது மாலதி!



கந்தசாமி தசரூபன்



# பெண்கள் எழுச்சி நாள்..!

தமிழ் மக்களின் விடிவிற்காய்
பெண்களும் சளைத்தவர்களல்லர்
எனக் களமாட தலைவன் – வழியில்
புறப்பட்ட மன்னார் மண்
பெற்றெடுத்த சகாயசீலி!

காந்திய தேசத்தின் அமைதிப்படை
இலங்கை அரசுடன் கைகோர்த்து
சதி வேலை செய்ய – எதிர்த்து
பெண்கள் சேனையை வழிநடத்தி
களமாடினாய் மாலதியாய்!

கோப்பாய் வெளிதனில்
வீரத்துடன் போராடி
விழுப்புண் அடைந்த போது
தமிழர் தேசத்திற்காய் சயனட் – அருந்தி
உயிர் விட்டு தியாகியானாய்!

முதல் பெண் மாவீரராய்
நீ மடிந்து முப்பதெட்டு ஆண்டுகள்
கடந்தாலும் உன் நினைவு – நாளில்
பெண்கள் எழுச்சி நாளாய்
பூச்சொரிந்து வீரவணக்கம்
செலுத்துகிறது தமிழர் தேசம்!



வானுப்பிரியா
சுபாஸ்கரசர்மா



# முதல் பெண் மாவீரர் மாலதியின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்

(கி.வசந்தன்)

முதல் பெண் மாவீரர் மாலதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

முதல் பெண் மாவீரர் மாலதியின் நினைவு தினம், வழமை போல இம்முறையும் பெண்கள் எழுச்சி நாளாக தமிழர்களினால் அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி இந்திய அமைதிப் படைக்கு எதிராக யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் போராடி மாலதி வீரச்சாவடைந்தார்.

அவரது நினைவு நாளில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், தீபம் ஏற்றியும், மலர் தூபியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# கிளிநொச்சியிலும் மாலதி நினைவு தினம்









(பூ.லின்ரன்)

கிளிநொச்சியில் இரண்டாம் லெப்டினல் முதல் பெண் மாவீரர் மாலதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தர்மபுரம் பகுதியிலும் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராசா தலைமையில் தனியார் மண்டபம் ஒன்றில் மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றது.






# மன்னாரில் முதல் பெண் மாவீரர் மாலதியின் 38 ஆம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் வீரமரணமடைந்த முதல் பெண் போராளி மாலதியின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் ஆள்காட்டிவெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

குடும்ப உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், அருட்தந்தை, முன்னாள் போராளிகள், உறவினர்கள் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது அவரது உருவப் படத்திற்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.















# இன்றைய ராசி பலன்கள் - 11.10.2025



மேஷம்

இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.



ரிஷபம்

இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



மிதுனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.



கடகம்

எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர் காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.



சிம்மம்

இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.



கன்னி

இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.



விருச்சிகம்

இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது.அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.10.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் இளம் தம்பதியுடன் மற்றொரு யுவதியும் கைது!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திம்பிலி பகுதியில் யாருமற்ற வீட்டில் இருந்து ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த திடீர் நடவடிக்கையின் போது, 22 வயதுடைய இளம் குடும்பஸ்தரிடமிருந்து 10 கிராம் ஐஸ் போதைப்பொருளும், அவருடைய 18 வயதுடைய மனைவியிடமிருந்து 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் அந்த வீட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 20 வயதுடைய இளம் பெண்ணிடமிருந்து 9 போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் சோதனையின் போது மூவரும் கைது செய்யப்பட்டனர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இவர்கள் முற்படுத்தப்படுவர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.